# முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்

## O.S.No.2/2015 (OS.No.30/2022)

DW1- ஜீனா நாள் -13.03.2025

**3ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

பெரம்பலூர் சர்வே எண். 422/7ஏ, 7பி ஆகியவற்றின் விஸ்தீரணம் நினைவில்லை. விஸ்தீரணம் 1 ஏக்கர் 11 1/2 சென்ட் என்றால் 1 ஏக்கருக்கு சற்று கூடுதலாக இருக்கும். இந்தஇடத்தில் தான் வீடு, கடைகள் மற்றும் 22 மனைகள் உள்ளன. நான் கடைகளுக்கு மின்இணைப்பு முன்வைப்புதொகை செலுத்தியுள்ளேன் என்றால் சரிதான். என் அப்பா வடிவேல் கையெழுத்து எனக்கு தெரியும். மொத்தம் 16 கடைகள் உள்ளது என்றால் 12 கடைகள் தான் உள்ளது அதை அவர்கள் பிரித்துக் கொண்டுள்ளார்கள். இந்த கடைகளில் சுமார் 4 கடைகளுக்கு என் அப்பா தான் டெபாசிட் செய்தார் என்றால் நான் தான் பணம் கொடுத்தேன். நான் பணம் கொடுக்கவில்லை என்றும் என் அப்பா தான் பணம் கட்டினார் என்றால் சரியல்ல. 2000-2001 ல் என் அப்பா தான் மின்இணைப்பு முன்வைப்பீடு தொகை எல்லா கடைகளுக்கும் செலுத்தினார் என்றும் நான் செலுத்தவில்லை என்று சொன்னால் சரியல்ல. என் அப்பாவிடம் பணம் கொடுத்ததற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. மின்இணைப்பு கட்டணம் என் அப்பா தான் கட்டினார் என்றால் சரியல்ல. என் சித்தி டாக்டர் சண்முகபிரியா திருமணம் ஆகாமல் ஒரே கூட்டுகுடும்பமாக இருந்தோம் என்றால் அவர் சென்னையில் இருந்தார். மாதத்திற்கு இரண்டுமுறை வந்து போவார் என்றால் சரியல்ல. அவருக்கு திருமணம் ஆகாததால் அவருடைய வருமானத்தை என் அப்பா வாங்கி பொது குடும்பத்திற்காக செலவு செய்தார் என்றால் சரியல்ல. பல ஆண்டுகளாக எல்லோரும் அறிய நான் தனித்து சொத்தை அனுபவித்து வருவதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எல்லோரும் ஒரே கூட்டுகுடும்பமாக தான் இருந்தோம்என்றும் என்னிடம் தனித்து அனுபவம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. 3ம் பிரதிவாதி

சந்திரபோஸ் ஒரு சிவில் இன்ஜினியர் பொதுபணித்துறையில் பணியாற்றியவர் என்றால் சரிதான். அவருடைய வருமானத்தையும் பொதுகுடும்பத்தில் செலவு செய்துள்ளார் என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு அனுபவ பாத்தியமும் இல்லை என்றால் சரியல்ல. எளம்பலூர் சர்வே எண்.249/6ல் 81 ஏர்ஸ் 2 ஏக்கர் என்றால் சரியல்ல. சர்வே எண்.249/3பி5-ல் 11.5 ஏர்ஸ் என்றால் சரியல்ல. சர்வே எண்.325/3 -ல் 4 ஏக்கர் 48 சென்ட் என்றால் சரியல்ல. சர்வே எண்.325/3-ல் இன்னொரு பகுதியும் சேர்த்து 6 ஏக்கர் 54 சென்ட் என்றால் சரிதான். சர்வே எண்.249/6-ல் 81 ஏர்ஸ்ஸை நான் விற்றுவிட்டேன் என்றால் சரியல்ல. நான் யுவராஜ்க்கு விற்றது என்ன சர்வே எண் நிலம் என்று நினைவில்லை. பொதுக்குடும்ப வருமானத்தில் இருந்து தான் என் அப்பா எல்லா நிலங்களையும் சம்பாதித்தார் என்றும் நான் பொதுக்குடும்பத்திற்கு எந்த பங்களிப்பும் செய்யவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய எதிர்வழக்குரையிலும் வாக்குமூலத்திலும் சொல்லியுள்ள சங்கதிகள் பொய்யானது என்றால் சரியல்ல. என் அப்பா உயிருடன் இருக்கும்போதே 22 மனைகளில் ஆளுக்கு 2 மனைகளை ஒதுக்கினார் என்று சொன்னால் சரியல்ல. ஒதுக்கியது போக மீதம் 12 மனைகள் இருந்தது என்றும் அதை நான் அபகரிக்கும் எண்ணத்தில் வழக்காடுகிறேன் என்றால் சரியல்ல. என் அம்மா 2010-ல் தானமாக எழுதி கொடுத்ததாக சொல்லி ஆவணத்தை நான் தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அந்த தானபத்திரம் மோசடியாக எம் அம்மாவிடமிருந்து மற்றவரின் பாகத்தை அபகரிக்கும் எண்ணத்தில் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை

Sd/-A. Balkis, B.L.,
Principal District Judge
Perambalur.